**02.09.2022**

**OS.No. 454/2019 PW : 1, திருமதி. சுசீலா**

**8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை...**

2ம் பிரதிவாதியான ஆனந்தன் என் உடன்பிறந்த என் அண்ணன். வாதிகளாகிய நாங்களும் 1 முதல் 3 பிரதிவாதிகளும், ராணி மற்றும் பத்மா ஆகிய 7 பேர் உடன்பிறந்தவர்கள். அதில் 6 பேர் பெண்கள். அதில் 2ம் வாதியான கீதா என்பவர் தான் இளையவர். அவருக்கு எப்போது திருமணம் ஆனது என்று எனக்கு ஞாபகமில்லை. 2ம் பிரதிவாதியை தவிர மற்ற என் சகோதரிகள் அனைவரும் திருமணம் ஆகி அவர் அவர் கணவர் வீட்டில் குடியிருக்கிறார்கள். 2ம் பிரதிவாதியின் மகன் 6ம் பிரதிவாதி. 6ம் பிரதிவாதியை வழக்கில் ஏன் சேர்த்தேன் என்று எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியின் மகன்கள் தான் 6வது அயிட்ட சொத்தை அனுபவித்து வருகிறார்கள். 6வது அயிட்ட சொத்தை 21.04.2003ல் 6ம் பிரதிவாதி கிரையம் வாங்கியிருக்கிறார். வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணம் 2004ம் வருடத்திற்கு முந்தையது என்பதால் தாவா சொத்துக்களில் நாங்கள் பங்குகோர முடியாது என்றால் சரியல்ல. பிராது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.